செ.வெ.எண்.46 நாள்–26.03.2018

## பத்திரிக்கை செய்தி

கரூர் மாவட்டத்தில் 234 பொது சேவை / இ–சேவை மையங்கள் மூலமாக வருவாய்த்துறை சான்றிதழ்கள், பட்டா மாறுதல் மற்றும் சமூக நலத்துறை தொடர்பான சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், கீழ்கண்ட 15 வருவாய்த்துறை சான்றிதழ்கள் இ–சேவை மையங்கள் மூலமாக வழங்கிடும் திட்டம் 01.03.2018 அன்று மாண்புமிகு தமிழக முதல்வரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி கரூர் மாவட்டத்திலும் இத்திட்டம் தொடங்கப்பட்டு, இதற்கான சேவை கட்டணமாக ரூ.60/– மட்டும் பொது சேவை / இ–சேவை மையங்களில் வசூலிக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது.

1. விவசாய வருமான சான்றிதழ்
2. வாரிசு சான்றிதழ்
3. குடிபெயர்வு சான்றிதழ்
4. சிறு குறு விவசாயி சான்றிதழ்
5. வசிப்பிட சான்றிதழ்
6. ஆண் குழந்தை இல்லை என்பதற்கான சான்றிதழ்
7. கலப்பு திருமண சான்றிதழ்
8. சொத்து மதிப்பு சான்றிதழ்
9. திருமணம் ஆகாதவர் என்பதற்கான சான்றிதழ்
10. விதவை சான்றிதழ்
11. அடகு வணிகர் உரிமம்
12. இயற்கை இடர்பாடுகளினால் இழந்த பள்ளி / கல்லூரி சான்றிதழ்களின் நகல் பெற சான்றிதழ்
13. வேலையில்லாதவர் என்பதற்கான சான்றிதழ்
14. கடன் கொடுப்போர் உரிமம்
15. இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு சான்றிதழ்

மேற்கண்ட 15 சான்றிதழ்களை பெறுவதற்கு பொதுமக்கள் தங்கள் அருகில் உள்ள பொது சேவை மையங்கள் / இ–சேவை மையங்களை பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

வெளியீடு – செய்திமக்கள் தொடர்பு அலுவலர் கரூர்.